DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : MC 13/2025

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**எதிர் மனுதாரர் ஆஜர்**

| | |
|---|---|
| Name | பிரியதர்ஷினி |
| Father / Husband Name | சந்தோஷ்குமார் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 29.04.2026

**குறுக்கு விசாரணை**

1. நான் எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கும் என் குழந்தைக்கும் ஜீவனாம்சம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய முதல் விசாரணையில் என்ன சங்கதி சொல்லப்பட்டுள்ளது என்று படித்து பார்த்து புரிந்துக்கொண்டுதான் கையொப்பம் செய்தேன். எனக்கும் எதிர் மனுதாரருக்கும் 26.07.2017 ம் தேதி பதிவு திருமணம் செய்துக்கொண்டோம். 04.09.2017 அன்று கோவிலில் வைத்து திருமணம் நடந்தது. எதிர் மனுதாரரும் நானும் காதலித்து பெரியோர்களிடம் பேசி இருவரும் புரிந்துக்கொண்டு தான் திருமணம் செய்துக்கொண்டோம். எதிர் மனுதாரர் திருமணத்திற்கு முன்பு என் உறவினர் தான், அவர் என்னுடைய அத்தை மகன். திருமணத்திற்கு முன்பே இருவருக்கும் நாங்கள் என்ன மதம், எந்த தெய்வத்தை வழிபடுகிறோம் என்ற விவரம் நன்றாக தெரியும் என்றால் சரிதான்.

2. திருமணம் என்னுடைய சம்மதத்துடன் தான் கோவிலில் நடந்தது என்றாலும், யாரும் என்னை கட்டாயப்படுத்தவில்லை என்றாலும் சரிதான். நான் எப்போதிலிருந்து எதிர் மனுதாரர் வீட்டில் வாழ தொடங்கினேன் என்றால் எங்கள் திருமண நிச்சயத்தார்த்தம் முடிந்ததும் ஜுன் 2017 காலக்கட்டத்தில் இருந்து அவர் வீட்டில் வசிக்கிறேன். நான் யாருடைய கட்டாயமும் இல்லாமல் தான் அவர் வீட்டிற்கு சென்றேன் என்றால் சரிதான். 26.07.2017 அன்று விருப்பப்பட்டு தான் எதிர் மனுதாரரை திருமணம் செய்தேன். என்னுடைய முதல் விசாரணை பத்தி 2ல் சொல்லியுள்ள சங்கதிகள் சரியானதா என்றால் சரியானது தான். 04.09.2017 அன்று கோவிலில் நடந்த எங்களுடைய திருமணத்தில் இரு வீட்டாரும் வந்தார்களா என்றால் என் வீட்டில் வரவில்லை, எதிர் மனுதாரர் வீட்டில் வந்தார்கள்.

3. கோவிலில் நடந்த திருமணத்தின்போது 26.07.2017 அன்று நடந்த திருமணத்தை போலவே அனைத்து ஏற்பாடுகளையும் எதிர் மனுதாரர் தான் பார்த்துக்கொண்டார் என்றால் சரிதான். 16.09.2017 அன்று மதுரைவாயிலில் உள்ள பாக்கியலட்சுமி திருமண மண்டபத்தில் எதிர் மனுதாரர் திருமண வரவேற்பு ஏற்பாடு செய்தார். அப்போதும் என்னுடைய குடும்பத்தார் வரவில்லை என்றால் சரிதான். மீண்டும் 3 மாதம் கழித்து என் வீட்டு சார்பாக மதுராந்தகத்தில் திருமண வரவேற்பு ஏற்பாடு செய்தார்கள். 3 மாதம் கழித்து மதுராந்தகத்தில் என் வீட்டில் திருமண வரவேற்பு வைத்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணை பத்தி 3 ல் என் பெற்றோர் 25 சவரன் தங்க நகைகள், ரூ.12 லட்சம் மதிப்புள்ள வீட்டு உபயோக பொருட்கள் கொடுத்ததாகவும், ரூ.8 லட்சம் செலவு செய்து திருமண வரவேற்பு வைத்ததாகவும், பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

4. திருமணம் முடிந்து எவ்வளவு நாட்கள் நானும் எதிர் மனுதாரரும் சந்தோஷமாக வாழ்ந்தோம் என்றால் திருமணம் முடிந்து 3 மாதத்திலேயே பிரச்சனை ஆரம்பித்துவிட்டது. நான் தாக்கல் செய்த ம.சா.ஆ.9 ல் சீர் வரிசை பொருளாக ஒரு மரசோபாவும், வாஷிங் மிஷினும், மிக்ஸியும் மட்டும் தான் உள்ளது என்றால் சரிதான். ரூ.12 லட்சம் மதிப்புள்ள வீட்டு உபயோக பொருட்களுக்கான ரசீதுகளை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 04.09.2017 ல் முதல் முதலில் எதிர் மனுதாரர் வீட்டில் கீழ்ப்பாக்கத்தில் உள்ள காவலர் குடியிருப்பில் வாழத்தொடங்கினோம். அங்கு நாங்கள் சந்தோஷமாக தான் வாழ்ந்தோம் என்றால் சரிதான். அதன் பின்னர் 4 மாதம் கழித்து நெற்குன்றத்தில் நானும் எதிர் மனுதாரரும் மட்டும் வாழ்ந்தோம். நெற்குன்றத்திலும் நானும் எதிர் மனுதாரரும் சந்தோஷமாக தான் வாழ்ந்தோம் என்றால் சரிதான்.

5. எதிர் மனுதாரரின் பெற்றோர் வசித்த காவலர் குடியிருப்பு இடம் பத்தவில்லை என்ற காரணத்தால் தான் நெற்குன்றத்திற்கு சென்றோம் என்றால் அதற்காகவும் சென்றோம், அப்போது எனக்கும் எதிர் மனுதாரருக்கும், அவரது அம்மாவிற்கும் இடையே பிரச்சனை வந்ததால் நெற்குன்றம் சென்றோம். என்னுடைய முதல் விசாரணை பத்தி-4 ல் பிரச்சனை காரணமாக நெற்குன்றம் சென்றோம் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என்னுடைய முதல் விசாரணையில் காவலர் குடியிருப்பில் வாழ்ந்தவரை சந்தோஷமாக வாழ்ந்தோம் என்றால் சரிதான். நெற்குன்றம் போன பிறகும் எதிர் மனுதாரருடன் சந்தோஷமாக வாழ்ந்தாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் முதன்முதலில் எப்போது கருவுற்றேன் என்றால் ஏப்ரல் 2018. நாங்கள் நெற்குன்றம் சென்றபோது எங்களுடைய வாழ்க்கையை நாங்களே தான் பார்த்துக்கொண்டோம் என்றாலும், வேறு யாரும் தலையிடவில்லை என்றாலும் சரிதான்.

6. நெற்குன்றத்திற்கு என் மாமியார் மாமனார் வருவார்களா என்றால் வருவார்கள். அவர்கள் நல்ல முறையில் தான் வந்து செல்வார்கள் என்றால் சரிதான். நான் MBA படித்துள்ளேன். நான் 2017-2018 ல் வேலை பார்க்கவில்லை, 2016 ல் திருமணத்திற்கு முன்பு வடபழனியில் உள்ள 361 டிகிரி மைன்ஸ் என்ற நிறுவனத்தில் கரியர் கவுன்சிலராக வேலை பார்த்தேன். என்னுடைய சொத்துக்கள் மற்றும் கடன்களுக்கான பிரமான பத்திரத்தில் என்னுடைய மாத செலவு ரூ.50,000 என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான், மேற்படி 50,000/- என்னென்ன செலவு

ஏற்படுகிறது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தற்போது வாடகை வீட்டில் உள்ளேனா அல்லது சொந்த வீட்டில் உள்ளேனா என்றால் கருங்குழியில் உள்ள என் பாட்டியின் பூர்வீக வீட்டில் உள்ளேன்.

7. அந்த வீடு எவ்வளவு பெரிய வீடு என்றால் 11 சென்ட் அளவு. அந்த வீட்டில் தற்போது நான் மட்டும் தான் வசிக்கிறேன் என்றால் இல்லை, என் பெற்றோர்கள், நான் மற்றும் என் குழந்தை வசிக்கிறோம். என் அப்பா எந்த வேலை செய்கிறார் என்றால் தற்போது வேலை செய்யவில்லை, உடல் நிலை சரியில்லாமல் வீட்டில் தான் உள்ளார். அம்மா கருங்குழி CSI இளநிலை பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டார். அது அரசு பள்ளி என்றால் சரிதான். என் அம்மா மாதம் ரூ.40,000/- ஓய்வு ஊதியம் வாங்குகிறார். என் அம்மா அரசு பள்ளியில் தலைமை ஆசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்றதால் கிட்டத்தட்ட 80,000/-க்கு மேல் ஓய்வூதியம் பெறுவார் என்றால் சரியல்ல. என்னுடைய சொத்துக்கள் மற்றும் கடன்களுக்கான பிரமான பத்திரத்தில் வாடகைக்கு வசிப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது, அது தவறு என்றால் சரியல்ல. நான் தற்போது எந்த வேலையும் செய்யவில்லை.

8. 2021ம் ஆண்டில் சுமார் 9 மாதம் பெங்களூரில் புரடக்டிவ் ஐடி Solutions ல் HR Recruiter ஆக வேலை செய்தேன். அப்போது மாதம் ரூ.15,000 சம்பளம் வாங்கினேன். அந்த சம்பள Bill இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் அம்மா கடைசியாக வாங்கிய சம்பளம் எவ்வளவு என்று தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு எவ்வளவு கடன்கள் உள்ளது என்றால் சுமார் 6 லட்சம் இருக்கும். என்னிடம் எவ்வளவு நகை உள்ளது என்றால் என் வீட்டில் கொடுத்த 25 சவரன் நகைகளில் 13 சவரன் எதிர் மனுதாரரிடம் உள்ளது. மீதம் 12 சவரன் என்னிடம் உள்ளது. என்னுடைய முதல் விசாரணை பத்தி 3 ல் மொத்த நகைகளும் எதிர் மனுதாரரிடம் உள்ளது என்று பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். திருமணத்தின்போது கொடுத்ததாக சொல்லும் ரூ.12 லட்சம் மதிப்புள்ள வீட்டு உபயோக பொருட்களும் என்னிடம் தான் உள்ளது என்றால் சரியல்ல, அவரிடம் உள்ளது.

9. என்னுடைய வங்கியின் பட்டியலை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் திருமணத்திற்கு முன்பு வேலை பார்த்ததற்காகன சம்பள ரசீதுகள் 2021ம் ஆண்டு வேலை பார்த்ததற்காகன சம்பள ரசீதுகள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் இருசக்கர வாகனம் வைத்துள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய சொத்துக்கள் மற்றும் கடன்களுக்கான பிரமாண வாக்குமூலத்தில் கருங்குழியில் உள்ள பூர்வீக வீட்டை காட்டவில்லை என்றால் சரிதான். எனக்கு வேறு சொத்துக்கள் ஏதாவது உள்ளதா என்றால் என் அப்பாவிற்கு வரவேண்டிய சொத்துக்கள் உள்ளது. தற்போது என் குழந்தை ஜாகிபுரத்தில் உள்ள Ever Win பள்ளியில் படிக்கிறார். என் வீட்டிற்கும் பள்ளிக்கு இடையே சுமார் 7 கி.மீ தூரம்.

10. மாதம் மாதம் குழந்தைக்கு ரூ.20,000/- செலவு செய்தற்கான ரசீதுகள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பள்ளிக்கான ரசீதுகளை தாக்கல் செய்யமுடியும், மருத்துவ செலவு, பள்ளிக்கு தேவைப்படும் இதர செலவுகளை செய்வேன். அந்த செலவுகள் தேவைப்பட்டால் தான் செய்வேன். மருத்துவ செலவு, ஆட்டோவிற்கான செலவு, பள்ளிக்கு தேவைப்படும் செலவுகள் ஆகிய செலவுகள் ஏற்படும். காலம் எண்.ஏ-ல் ரூ.50,000/-, சி-ல் ரூ.20,000/- செலவாகுவதாக குறிப்பிட்டுள்ளேன்

என்றால் சரிதான். எனக்கு மாதம் ரூ.70,000 செலவாகிறதா என்றால் ரூ.50,000/- தான் ஆகிறது. ரூ.50,000/- செலவாகும்போது அதை பிரித்து ரூ.70,000/- மாக காட்டுவது தவறு என்றால் சரிதான். நான் எப்போதாவது அல்லது தற்போது வீட்டில் இருந்து வேலை பார்த்துள்ளேனா என்றால் 2021ம் ஆண்டு பார்த்துள்ளேன்.

11. என்னுடைய முதல் விசாரணை பத்தி 4ல் கூறியுள்ள சங்கதிகள் தான் சரியானது. சண்டையில் ஒருவர் ஒன்று சொன்னால், மற்றொருவர் ஒன்று சொல்வார் என்றால் சரிதான். நான் ஒன்றுமே செய்யாமல் எதிர் மனுதாரரின் தாயார் என்னிடம் சண்டை போட்டிருக்க மாட்டார் என்றால் அவங்க ஏதாவது சொல்லிருந்தால் தான் நான் எதிர்வினையாற்றியிருப்பேன். என்னுடைய முதல் விசாரணையில் எதிர் மனுதாரரின் தாயார் மட்டும் தான் சண்டை போட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் எப்போது எதிர் மனுதாரரை விட்டு பிரிந்து வந்தேன் என்றால் 23.11.2019 அன்று பிரிந்தோம். காவலர் குடியிருப்பிலும் நெற்குன்றத்திலும் நாங்கள் நன்றாக தான் வாழ்ந்தோம் என்றால் காவலர் குடியிருப்பில் பிரச்சனை வந்தது, நெற்குன்றத்திலும் பிரச்சனை வந்தது. நாங்கள் தனியாக போன பிறகும் பிரச்சனை வந்துக் கொண்டிருந்தது, எங்களுக்குள் வரும் பிரச்சனை என் கணவர் அவர் அம்மாவிடம் சொல்லி என் மாமியார் இரண்டு மைத்துனர்கள் வந்து பிரச்சனை செய்வார்கள்.

12. நான் நெற்குன்றத்தில் யாருடைய தலையீடும் இல்லாமல் வாழ்ந்தோம் என்று கூறிவிட்டு தற்போது அவர்கள் வந்து பிரச்சனை செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு பிரசவம் எங்கு நடந்தது என்றால் வடபழனி ஆகாஷ் மருத்துவமனையில் நடந்தது. அதற்கான செலவுகளை என் வீட்டில் பார்த்துக்கொண்டார்கள். முதல் விசாரணை பத்தி 7ல் எதிர் மனுதாரர் தான் மனஉலைச்சலை ஏற்படுத்தினார் என்று அதனால் எனக்கு ஒரு வாரத்திற்கு முன்பே பிரசவ வலி வந்துவிட்டதாகவும், அவர் என்னை மருத்துவமனையில் சேர்த்ததாகவும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் பிரச்சனை வந்தது உண்மைதான், ஆனால் அவர் என்னை மருத்துவமனையில் சேர்க்கவில்லை, என் தங்கை மூலம் மருத்துவமனையில் சேர்ந்தேன்.

13. பிரச்சனையும் ஏற்படவில்லை, நான் மனஉலைச்சலும் ஆகவில்லை, கர்ப காலத்தில் நீர் குறைந்ததால் தான் மருத்துவமனையில் சேர்ந்தேன் என்றால் சரியல்ல. எனக்கு வலி வந்ததால் மருத்துவமனையில் சேர்ந்தேன். குழந்தை பிறந்த தேதி 18.11.2019. குழந்தை பிறந்ததும் யார் பார்த்துக்கொண்டார் என்றால் நான் தான் பார்த்துக்கொண்டேன். எனக்கு மொத்தமாக எவ்வளவு கடன் உள்ளது என்றால் நகை அடகு வைத்தது, கைமாற்றாக வாங்கியது எல்லாம் சேர்த்து 7 லட்சம் வரை இருக்கும். என்னுடைய சொத்துக்கள் மற்றும் கடன்களுக்கான பிரமாண வாக்குமூலத்தில் ரூ.1,65,000/- தனிநபரிடம் கடன் வாங்கியுள்ளதாகவும், மாதம் வட்டி ரூ.9500/- கட்டுவதாகவும், நகை கடன் மட்டும் ரூ.7 லட்சம் என்றும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் மாதம் மாதம் வட்டி கட்டிக்கொண்டுதான் வருகிறேன். நான் எந்த வேலைக்கும் செல்லாமல் மாதம் ரூ.70,000/- செலவு செய்து, 10,000/- ரூபாய் வட்டிக்கட்டிக்கொண்டு வருகிறேன் என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

14. நான் எந்த வேலைக்கும் செல்லாமல் மாதம் ரூ.80,000/- செலவு செய்தால் என்னுடைய கடன் 6 லட்சம் வராது அதைவிட அதிகமாக வரும் என்றால் சரியல்ல. MBA படித்த நான் ஏன் வேலைக்கு செல்லவில்லை என்றால் என்னுடைய பெற்றோர்கள் இருவரும் வயதானவர்கள் என்பதால் குழந்தையை பார்த்துக்கொள்ள யாரும் இல்லை, அதனால் வேலைக்கு போகவில்லை. என் வீட்டில் சமையலுக்கு ஆள் வைத்துள்ளேன். எதிர் மனுதாரர் வேலைக்கு செல்வதை காட்ட ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என்னிடம் ஆதாரம் இல்லை. அவருடைய வருமானத்தை நான் தோராயமாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் அவரோடு வாழ்ந்த போது அவர் என்ன சம்பளம் வாங்கினார் என்று எனக்கு தெரியும் அதை வைத்து தெரியும். என்னுடைய சொத்துக்கள் மற்றும் கடன்களுக்கான பிரமாண வாக்குமூலத்தில் அவருடைய கடைசியாக வாங்கிய சம்பளம் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் குத்துமதிப்பாக தான் அவருடைய சம்பளத்தை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

15. குழந்தை பிறந்தவுடன் அங்கு பார்த்துக்கொள்ள யாரும் இல்லை என்பதால் நான் என் அம்மா வீட்டிற்கு போகவேண்டும் என்பது ஏற்கெனவே நாங்கள் இருவரும் சேர்ந்துதான் தீர்மாணித்திருந்தோம். 23.11.2019 அன்று பிரச்சனை வந்ததால் அன்றிரவே நான் அம்மா வீட்டிற்கு வரவேண்டி ஆகிவிட்டது. 23.11.2019 அன்று என்னை சென்னையில் இருந்து நான் என் அம்மா, சகோதரி ஆகியோருடன் சேர்ந்து கருங்குழிக்கு வந்தேன். 23.11.2019 அன்று நான் மருத்துவமனையில் இருந்து நெற்குன்றத்திற்கு சென்றேன். நெற்குன்றத்திற்கு நானும் எதிர் மனுதாரரும் மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் ஆகி வீட்டிற்கு சென்றோம். அப்போது வீட்டிற்கு அவருடைய பெற்றோரும், என்னுடைய அம்மா, சகோதரியும் இருந்தார்கள். அப்போது இரண்டு வீட்டாரும் இருந்தபோது பிரச்சனை எதுவும் இல்லை என்றால் சரிதான்.

16. நான் மருத்துவமனையில் 5 நாள் இருந்தேன், நான் மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் ஆன அன்று மாலை தான் எதிர் மனுதாரர் வீட்டார் நெற்குன்றத்திற்கு வந்தார்கள். எதிர் மனுதாரர் வீட்டார் எவ்வளவு நேரம் இருந்தார்கள் என்றால் எனக்கு தெரியவில்லை. நான் வீட்டிற்குள் செல்லும்போதே பிரச்சனை வந்தது. 28.09.2024 அன்று நான் மேல்மருவத்தூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். எதற்காக கொடுத்தேன் என்றால் Mutual விவாகரத்து கேட்டு எதிர் மனுதாரர் அறிவிப்பு கொடுத்தார், நான் சேர்ந்து வாழ வேண்டும் என்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். ம.சா.ஆ.5 ல் இருவரும் சுமூகமாக பேச வேண்டும் என்று அவ்வாறு நான் பேசவரவில்லை எனில் Mutual விவாகரத்து தாக்கல் செய்துக்கொள்ளலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

17. ம.சா.ஆ.5 ல் கண்ட குற்றச்சாட்டுகளை மறுத்து பதில் அறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை. ம.சா.ஆ.6 ல் நான் காவல் நிலையத்தில் அளித்த புகாரின் நகல் என்றால் சரிதான். ம.சா.ஆ.6 ல் 100 பவுன் நகை, பணம் கேட்டதாக பொய்யான சங்கதிகளை புகார் கொடுத்துள்ளேன் என்றால் அதில் சொன்ன சங்கதிகள் உண்மைதான். ம.சா.ஆ.6 ல் உள்ள சங்கதிகளை இந்த மனுவில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

**எதிர் மனுதாரர் தரப்பு வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**